
## திராவிடத்தால் வாழ்கிறோம்

910

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

120

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த எம்.ஆர்.கண்ணன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**

# உத்தமத் தொண்டர்: எம்.ஆர்.கண்ணன்!

1976-ஆம் ஆண்டு, கழக உடன்பிறப்புகள் கொத்துக் கொத்தாக நெருக்கடிகாலச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு, வதைக்கப்பட்டு வந்த நேரம், அதற்கிணையாக கழகத்தின் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பேசுவதற்கும், எழுதுவதற்கும் தொண்டர்களைச் சந்திப்பதற்கும் பெரும் போராட்டத்தை நிகழ்த்திக் கொண்டிருந்தார்.

தொண்டர்கள் சந்திப்பு, தொடர் பயணம், வழக்கு விசாரணை என தனி ஒருவராக கலைஞர் சுற்றிச் சுழன்றுகொண்டிருந்த நேரம். 1976-ஆம் ஆண்டு ஜூன் 15-ஆம் தேதி, செவ்வாய்க்கிழமை மாலை நான்கு மணிவாக்கில் 'செவியைப் பிளந்து இதயத்தைச் சம்மட்டியால் தாக்கிடும் செய்தியொன்று பறந்து வந்தது' எனக் குறிப்பிட்டு, ஓர் உடன்பிறப்பின் மறைவுச் செய்தியை அடுத்த நாள் உடன்பிறப்புக் கடிதத்தில் பகிர்ந்திருந்தார்.

"என் நெஞ்சில் நீயிருப்பாய், கண்ணா" என நெஞ்சுருக அவர் நினைத்தழுத அந்த உடன்பிறப்பு எம்.ஆர்.கண்ணன். அன்றைய ஒன்றுபட்ட சென்னை மாவட்டக் கழகத்தின் உரமிக்க தளபதி. புயலையும் புன்னகையுடன் எதிர்த்து நின்ற ஆருயிர் உடன்பிறப்பு.

செங்கல்பட்டு மாவட்டத்தில் பிறந்தவர் கண்ணன். பெற்றோருடன் சென்னைக்கு இடம்பெயர்ந்து சென்னை சௌகார்பேட்டை அண்ணா பிள்ளை தெருவில் வசித்து வந்தவர். சென்னை இந்து இறையியல் உயர்நிலைப் பள்ளியில் கல்வி பயின்றவர். படிக்கும் காலத்திலேயே சுயமரியாதை இயக்கப் பற்று கொண்டு செயல்படத் தொடங்கினார். வடசென்னை பகுதியில் என்.வி.என் போன்றோருடன் இணைந்து தீவிரமாக செயல்பட்டு வந்தவர் கண்ணன்.

கழகம் தொடங்கப்பட்டபோதே, வாழ்நாள் உறுப்பினராகப் பதிவு செய்து கொண்டவர். கழகத்தின் மீது நீங்கா பற்றும், கொள்கை உறுதியும் கொண்ட தலைநகரத்தின் முன்னோடி.

### மாநகராட்சி உறுப்பினர்

1959-ஆம் ஆண்டில், முதன்முதலாக கழகத்தின் சார்பில், சென்னை மாநகராட்சியின் அப்போதைய 27-வது வட்ட மன்ற உறுப்பின ராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றவர். அந்த வெற்றி, சென்னை மாநகரில் கழகத்தின் செல்வாக்கும், கலைஞரின் செல்வாக்கும் இரண்டும் ஒன்றாகக் கலந்த நிகழ்வு. அந்த வெற்றியின் மூலம்தான் சென்னை மாநகரத்தை ஆட்சி செய்யும் பொறுப்பும் கழகத்துக்கு வந்து சேர்ந்தது.

1967-ஆம் ஆண்டில், சென்னை பேசின்பிரிட்ஜ் தொகுதியின் வேட்பாளராகப் பேரறிஞர் அண்ணா அவர்களால் அறிவிக்கப்பட்டார் கண்ணன். அதற்கு முன், 1957-ஆம் ஆண்டு மற்றும் 1962-ஆம் ஆண்டில் அந்தத் தொகுதியில் கழகத்தின் முன்னணித் தலைவரும், கழக அமைப்புச் செயலாளருமான என்.வி.நடராசன் அவர்கள் நின்று வெற்றிவாய்ப்பை இழந்த தொகுதி. ஆனால், 1967-ஆம் ஆண்டு எம்.ஆர்.கண்ணன் 54 சதவிகித வாக்குகளுடன் வெற்றிபெற்று வந்தார். அதுபோல, பேரறிஞர் அண்ணாவுக்குப் பின்னர், 1971-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞரால் அதே தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டு 56 சதவிகித வாக்குகளுடன் மிகப்பெரிய வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று வந்தார். அந்த அளவுக்கு அப்பகுதி மக்களின் நம்பிக்கை பெற்ற கழக தளகர்த்தராகத் திகழ்ந்தார்.



### விசுவாசமிக்க கண்மணி

தலைமைக் கழகம் அறிவிக்கும் போராட்டங்கள் தொடங்கி, பகுதி பிரச்சினைகளுக்கான அறிவிக்கப்படாத பல போராட்டங்கள் வரை கண்ணன் முன்னணியில் இருப்பார். ஏனென்றால், அவர் வசித்த பகுதியில்தான் **'அறிவகம்'** இருந்தது. பகுதியில் எந்த நிகழ்ச்சி என்றாலும், அங்கே நமது கண்ணன் இருப்பார். கழகக் கூட்டமா? மேடை அமைப்பவர்களில் அவரும் ஒருவராக இருப்பார். கழகம் இடும் கட்டளைகளை நிறைவேற்ற கழகத்திற்காக எந்தத் தொல்லையையும் ஏற்றுக்கொள்ள, தன்மான இயக்கத்தின் தூணாகவும், கழகத்தின் விசுவாசமிக்க கண்மணியாகவும் இருந்தவர் கண்ணன் என கலைஞர் தனது கடிதத்தில் பதிவு செய்துள்ளார்.

1967-ஆம் ஆண்டு அண்ணா பிறந்த நாள் நிகழ்ச்சியைப் பதிவு செய்துள்ள 'நம்நாடு' இதழ், அதில் என்.வி.என், சி.வி. ஆடலரசன், டி.கே.பொன்னுவேலு, ஆர்.ஆறுமுகம் உள்ளிட்ட அன்றைய கழக முன்னோடிகளுடன் எம்.ஆர்.கண்ணனும் முதல் வட்டம் தொடங்கி, 69-வது வட்டம் வரை பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு கொடியேற்றிய நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளது.

1968-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் வடசென்னையின் 60 வட்டங்களுக்கான தேர்தல் பணிக்குழுவில் அன்றைய அமைப்புச் செயலாளர் நீலநாராயணனுடன் இணைந்து சென்னை மாநகராட்சியைக் கழகம் கைப்பற்ற தீவிரமாகச் செயல்பட்டுள்ளார். பேரறிஞர் அண்ணா சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றபோது, அண்ணனின் மனம் அறிந்த தம்பியாக, கலைஞரின் வழிகாட்டலில் செயல்பட்ட தளகர்த்தர் கண்ணன்.

> **"உடன்பிறப்பே, கண்ணீரில் நனைந்த இந்தச் சொற்களை கண்ணனுக்குக் காணிக்கையாக்கி, அந்த உத்தமத் தொண்டரின் வழிநின்று கடமைகளை ஆற்றிடுவோம்"**

### இருக்கையும் பேச்சும்

சட்டமன்றத்தில் அவர் பேச்சு, ஒரு முழக்கமாகவே இருக்கும். ''சுயமரியாதைச் சங்கநாதம் எனலாம்! வீரம் கொப்பளிக்கும் விளக்கவுரை என வியந்து புகழலாம்! கழகத்திற்கு எதிராக ஒரு சிறு சொல் வீசப்பட்டாலும், சிறுத்தையெனச் சீறிடும் அந்தக் கொள்கை மறவர். அன்பின் சிகரம், அடக்கத்தின் வடிவம், அநியாயம் கண்ட இடத்து ஆர்த்தெழும் களிறு" எனக் குறிப்பிட்டிருக்கிறார் கலைஞர்.

சட்டமன்றத்தில் கலைஞரின் பின் இருக்கையில் அமர்ந்திருப்பார் கண்ணன். எதிர்க்கட்சியினர் எடுத்துவைக்கும் கருத்துகளுக்கு, கழக உறுப்பினர்களின் வாதம் சங்கநாதமாக முழங்கும். விவாதம் சூடு ஏறும்போது கண்ணனின் பேச்சு கர்ச்சனையாக மாறும். அமளியில் போய் முடியுமோ என்ற அச்சம் பிறக்கும் நேரத்தில், கலைஞர் திரும்பிப் பார்ப்பார். தலைவரின் பார்வை பட்டவுடன் கண்ணன் பேச்சை நிறுத்திக் கொள்வார். புயல், தென்றலாக மாறும். பேச்சு முடிவுறும். இப்படி கண்ணனின் சட்டமன்ற நாட்கள் இருந்துள்ளன.

அண்ணாவின் மறைவுக்குப்பின் கலைஞரின் தலைமையை ஏற்றுக் கொண்டதுடன், கழகத்தின் முன்னோடிகள் பலர் பிரிந்து, கழகத்துக்கு எதிராக நின்றபோதும் அவர்களை எதிர்கொள்வதில் கலைஞருடன் உறுதியாக நின்றவர் கண்ணன். "கழகத்திற்காக எந்தத் தொல்லையையும் ஏற்றுக்கொள்ள, இதோ ஒரு உடன்பிறப்பு இருக்கிறது- இணைபிரியாத உடன்பிறப்பு எனப் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தோமே!" என கலைஞரின் கடிதம் எம்.ஆர்.கண்ணனின் நாட்களைப் பெருமையுடன் நினைவுகூர்ந்துள்ளது.

1976-ஆம் ஆண்டு அவர் மறைவின்போது கலைஞர் எழுதிய இரங்கல் கடிதம், நெருக்கடி காலத் துயரத்தில் இருந்த அவருக்கு, அவரே ஆறுதல் சொல்லிக் கொள்வதுபோல உணர்ச்சித் ததும்பலாக இருக்கும். "நானிருக்கும் வரையில் என் நெஞ்சில் நீயிருப்பாய் கண்ணா! நிச்சயம் இருப்பாய்!" என குறிப்பிட்டிருக்கிறார். "உடன்பிறப்பே, கண்ணீரில் நனைந்த இந்தச் சொற்களை கண்ணனுக்குக் காணிக்கையாக்கி, அந்த உத்தமத் தொண்டரின் வழிநின்று கடமைகளை ஆற்றிடுவோம்" என்ற முத்தமிழறிஞரின் சொற்களே காலத்தின் கல்வெட்டு. கலைஞரின் எழுத்துகளில் கழகத்தின் நினைவுகளாக எம்.ஆர் கண்ணன் என்றும் போற்றப்படுவார்.

**...துடிக்கும்**

## பாரபட்ச பா.ஜ.க.!

நீட் திணிப்பு, புதிய கல்விக்கொள்கை, விஸ்வகர்மா யோஜனா, மும்மொழிக் கொள்கை என கடந்த 11 ஆண்டு கால பா.ஜ.க. ஆட்சியில் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களை கல்வியில் இருந்து வெளியேற்றுவதற்கான எண்ணற்ற முயற்சிகள் கண்ணுக்குத் தெரிந்து நடந்திருக்கின்றன. ஆனால், வெளியே தெரியாமல் இதுபோல பல சூழ்ச்சிகளும் நடந்துகொண்டிருக்கின்றன என்பதை, கடந்த 5 ஆண்டுகளில் மத்திய பல்கலைக்கழகங்களில் செய்யப்பட்ட பணி நியமனம் குறித்த தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

இதுதொடர்பாக, ராஷ்ட்ரிய ஜனதா தளம் எம்.பி. மனோஜ் குமார் ஜா மாநிலங்களவையில் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய கல்வித்துறை இணையமைச்சர் சுகந்தா மஜூம்தார் அளித்துள்ள பதிலில், "ஜூன் 30, 2025 கணக்குப்படி மத்திய பல்கலைக்கழகங்களில் பேராசிரியர், இணைப் பேராசிரியர், உதவிப் பேராசிரியர் பணியிடங்களின் மொத்த எண்ணிக்கை 18 ஆயிரத்து 951. அதில் 14 ஆயிரத்து 62 இடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. 25 சதவிதம் பணியிடங்கள் காலியாக உள்ளன" எனத் தெரிவித்துள்ளார்.

மேலோட்டமாகப் பார்த்தால், 25% காலியிடங்கள்தானே என்று தோன்றலாம். ஆனால், இதில்தான் பா.ஜ.க.வின் உள்குத்து இருக்கிறது. இதில் பொதுப்பிரிவினருக்கான இடங்கள் 15% மட்டுமே காலியாக உள்ளன. இதர பிற்படுத்தப்பட்டோருக்கான காலியிடங்கள் 40%-ஆகவும், தாழ்த்தப்பட்டோருக்கான காலியிடங்கள் 30%-ஆகவும், பழங்குடியினருக்கான காலியிடங்கள் 37%-ஆகவும் உள்ளன என்பது உற்றுநோக்க வேண்டிய செய்தி.

குறிப்பாக, கடந்த 5 ஆண்டுகளில் ஓ.பி.சி. பிரிவில் 423 பேரை நியமித்திருக்க வேண்டும், ஆனால், நியமிக்கப்பட்டதோ 84 பேர் மட்டும்தான். இது 20% மட்டும்தான். அதேபோல தாழ்த்தப்பட்ட பிரிவினரில் 308 பேரை நியமித்திருக்க வேண்டும், ஆனால், நியமிக்கப்பட்டதோ 111 பேர் (36%) மட்டும்தான். பழங்குடியினர் பிரிவில் 144 பேரை கடந்த 5 ஆண்டுகளில் நியமித்திருக்க வேண்டும். ஆனால், நியமிக்கப்பட்டதோ 24 பேர் (17%) மட்டும்தான்.

உயர் ஜாதியினர் என்றால், இனிக்கும் பா.ஜ.க.வுக்கு இந்த நாட்டின் பெரும்பான்மை மக்களான பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் என்றால், ஏன் கசக்கிறது என்ற கேள்வியைத் திரும்பத் திரும்ப எழுப்ப வேண்டியுள்ளது.

## ஃப்ளாஷ்பேக்



சு.ஞானப்பிரகாசம்



### 1988-இல் இன்றைய கழகத் தலைவருடன்...

1988-ஆம் ஆண்டு அன்றைய இளைஞர் அணிச் செயலாளர்-இன்றைய கழகத் தலைவர் அவர்கள், தென்காசி மாவட்டம், புளியங்குடிக்கு வருகை தந்தார். அப்போது பாளையங்கோட்டை முன்னாள் நகர்மன்றத் தலைவர் சுப.சீதாராமன் அவர்களிடம் உதவியாளராக இருந்த நான், தலைவர் அவர்களை வரவேற்று சிறப்பு செய்தபோது அவருடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது. 45 ஆண்டு கால கழகத் தொண்டனாகப் பெருமிதம் கொள்ளும் தருணங்களுள் இதுவும் ஒன்று.

**- சு.ஞானப்பிரகாசம், புளியங்குடி, தென்காசி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### சுவரொட்டி ஒட்ட எதிர்ப்பு!

01.08.1960 அன்று சென்னை, கோடம்பாக்கம் அண்ணா நகரில் கழகத்தின் இந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டுக்காக சுவரொட்டி ஒட்டிய கழகத்தினரை, ஆபாசச் சுவரொட்டித் தடுப்புச் சட்டத்தின் கீழ், போலீசார் கைது செய்தனர். மாநாட்டுக்கு முதலிரண்டு நாட்களில், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள், சுவரொட்டிகள் ஒட்டிய தள்ளுவண்டிகளை இழுத்துச் சென்று விளம்பரம் செய்தனர். விளம்பரம் செய்வதற்குத் தடைகள் இருந்தும், இந்தி எதிர்ப்பு மாநாட்டிற்கு ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் கூடியிருந்தனர்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.